# அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - நோர்வே

## தேசிய மட்டத்திலான அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2023

## திருக்குறள் மனனம் ஒப்பித்தல் போட்டி - ஆண்டு 5

பின்வரும் 5 குறள்களை மட்டும் ஒப்பித்தல். குறள்களின் பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.

1. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை. (குறள் 400)

   அழிவு இல்லாத நிலையான செல்வம் கல்வி. அதை விடச் சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

2. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
   உயிரினும் ஓம்பப் படும். (குறள் 131)

   ஒழுக்கம் மேன்மையைத் தருவதால், உயிரினும் மேலானதாக ஒழுக்கத்தைப் பேணல் வேண்டும்.

3. அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்றில்லை
   ஒழுக்கம் இலான்கண் உயர்வு. (குறள் 135)

   பொறாமை உடையவனிடம் செல்வம் சேர்வதில்லை. அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடத்து உயர்வு இல்லை.

4. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
   அகநக நட்பது நட்பு. (குறள் 786)

   ஒருவருடன் முகம் மட்டும் மலரும் வகையில் நட்புக் கொள்வது நட்பன்று. உள்ளமும் மலர நட்புக் கொள்வதே நட்பாகும்.

5. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக. (குறள் 391)

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.

கற்க வேண்டிய நூல்களை நாம் பிழை இல்லாது கற்க வேண்டும். அவ்வாறு கற்றதன்படி ஒழுக வேண்டும்.